திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 2024 ஆம் ஆண்டின் தவக்காலச் செய்தி

**பாலைவனத்தின் மூலம் கடவுள் நம்மை விடுதலைக்கு அழைத்துச் செல்கின்றார்.**

அன்பு சகோதர சகோதரிகளே!

கடவுள் தன்னை வெளிப்படுத்தும்போது, அவருடைய செய்தி எப்போதும் விடுதலையைப் பற்றியதாகத் தான் இருக்கும், " நானே உன் கடவுளாகிய ஆண்டவர்; அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர் (விப: 20>2) சீனாய் மலையில் மோசேக்கு கொடுக்கப்பட்ட கட்டளையின் முதல் வார்த்தை இதுவே. அவற்றைக் கேட்டவர்கள் கடவுள் பேசிய விடுதலையைப் பற்றி அறிந்திருந்தனர். அவர்களின் அடிமைத்தனத்தின் சுமை அதிகமாக இருந்தது. பாலைவனத்தில் அவர்களின் விடுதலைக்கு ஒருவழியாக "பத்து வார்த்தைகள்" கிடைத்தது. நாம் அதை பத்து கட்டளைகள் என்று அழைக்கிறோம். "கட்டளைகள்" வழியாக கடவுள் தம் அன்பின் வலிமையை வடிவமைத்தார். விடுதலையின் அழைப்பு அவர்களுக்கு தேவைப்பட்டது. அதற்கான பதில் அவர்களுக்கு உடனடியாக கிடைக்கவில்லை. அது ஒரு பயணத்தின் ஒரு பகுதியாக முதிர்ச்சியடையவேண்டும். பாலைவனத்தில் இருந்த மக்கள் இன்னும் எகிப்தை நினைத்து கடந்த காலத்தை நினைத்து அடிக்கடி ஏங்குவதும், கடவுளுக்கும் மோசேக்கும் எதிராக முனுமுனுப்பதுவும் இன்றும் கூட நடந்துகொண்டிருக்கிறது. கடவுளின் மக்கள் கடந்த கால அடிமைத்தனத்தோடு ஒட்டிக்கொள்ளாமல் அதைவிட்டு விட அழைக்கப்படுகிறோம். நம்பிக்கையற்றவர்களாக அலைந்து திரிந்துகொண்டிருக்கும் இத்தருணங்களில் வாக்களிக்கப்பட்ட நிலம் நமது இலக்கு, தவக்காலம் அருளின் காலம். ஓசேயா இறைவாக்கினர் கூறுவது போல பாலைவனமாக்கப்பட்ட நம் வாழ்க்கைக்கு மீண்டும் கடவுளின் அருளைத் தரும் காலம். "அவரின் முதல் அன்புக்குரியவர்" (ஓசேயா 2"16-17) நம் அடிமைத்தனத்தை விட்டு விட்டு மரணத்திலிருந்து வாழ்வுக்கும், பாஸ்காவை அனுபவிக்கவும் கடவுள் தம் மக்களை வடிவமைக்கிறார். நமக்கு உதவுகிறார். ஒரு மணமகனைப் போல கடவுள் நம்மை அவர்பக்கம் ஈர்த்து அன்பின் வார்த்தைகளை நம் காதுகளுக்குள் மெல்லப்பேசுகிறார்.

அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கான பயணம் ஒரு சுருக்கமான பயணம் அல்ல. நம்முடைய தவக்காலக் கொண்டாட்டம் உறுதியானதாக இருக்கவேண்டுமென்றால் முதல்நிலை, உண்மைநிலைக்கு நம்முடைய கண்கள் திறக்கப்பட வேண்டும். எரியும் புதரில் மோசேவை கடவுள் அழைக்கும்போது, அவர் காண்கின்ற கடவுளாக, அனைத்திற்கும் மேலாக " எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்; அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்; ஆம் அவர்களின் துயரங்களை நான் அறிவேன். எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும் தேனும் பொழியும் … நாட்டிற்கு அவர்களை நடத்திச்செல்லவும் இறங்கிவந்துள்ளேன்." (விப: 3:7-8) என்று கேட்கும் கடவுளாகவும் காட்டுகிறார். இன்றும் ஒடுக்கப்பட்ட எத்தனையோ சகோதர சகோதரிகளின் அழுகுரல் விண்ணகத்தை எட்டுகிறது. நம்மை நாமே கேட்டுக்கொள்வோம். அந்த அழுகையை நாம் கேட்கிறோமா? அது நம்மை தொந்தரவு செய்கிறதா? அந்த அழுகை நம்மை முன்செல்ல நகர்த்துகிறதா. தொடக்கத்திலிருந்து ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருந்த நாம் நம்முடைய பல செயல்களால் நம் சகோதரத்துவத்தை மறுத்து, ஒருவர் மற்றவரிடமிருந்து நம்மை ஒதுக்கி வைக்கிறோம்.

லம்பேடுசாவிற்கு நான் பயணம் செய்யும்போது, உலகமயமாக்கலின் அலட்சியத்தை எதிர்க்கும் விதமாக நான் கேட்ட இரண்டு கேள்விகள் மிக அழுத்தத்தை உண்டாக்கிவிட்டது. நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? (தொடநூல் 3:9) மற்றும் உன் சகோதரன் எங்கே? (தொடநூல்:4:9) இந்த இரண்டு கேள்விகளையும் கேட்டு, தெளிவாகப் புரிந்துகொண்டால், நம்முடைய தவக்காலப் பயணம் உறுதியானதாக இருக்கும். இன்றும் நாம் பாரவோனின் ஆட்சியின் கீழ்தான் இருக்கிறோம். விதிகள் நம்மை வேறுபடுத்தியும் சோர்வடையவும் செய்யும். சில மாதிரி வளர்ச்சி, நம்மைப் பிரித்து, எதிர்காலத்தை திருடிக்கொள்கின்றன. பூமி, காற்று, மற்றும் தண்ணீர் மாசடைந்ததைப் போல நம் ஆன்மாவும் மாசுபடுகிறது. திருமுழுக்கு நம்மை

விடுதலைக்கு இட்டுச்செல்லவேண்டும். இருந்தபோதும், அடிமைத்தனத்திற்கான விவரிக்கமுடியாத ஏக்கம் இன்னும் நம்மில் உள்ளது. பழக்கமான விஷயங்களின் பாதுகாப்பு மீதான ஒருவகை ஈர்ப்பு நம் விடுதலைக்கு தீங்கு விளைவிக்கும்.

விடுலைப் பயணத்தின் குறிப்பில் ஒரு குறிப்பிடத்தக்க விவரம் உள்ளது. அது தான் கடவுள் பார்க்கிறார், செயல்படுகிறார் மற்றும் விடுதலையைக் கொண்டு வருகிறார். இஸ்ராயேல் இதைக் கேட்கவில்லை. பாரவோன் அவர்களின் விண்ணகக் கனவுகளை முடக்குகிறான். பார்க்க முடியாமல் தடுக்கிறான். மனித மாண்புகள் மாற்றமுடியாமல் மிதிக்கப்படுகின்றன. உண்மையின் பிணைப்புகள் மறுக்கப்படுகின்றன. நம்மை நாமே கேட்டுக்கொள்வோம். எனக்கு ஒரு புதிய உலகம் வேண்டுமா? பழையனவற்றை சமரசம் செய்துகொண்டு விட்டுச் செல்லத் தயாரா? ஒரு பெரிய எண்ணிக்கையில் அமைதிக்காகப் பாடுபடும் என் சக ஆயர்கள் பலரின் சாட்சியங்கள் எனக்கு ஆறுதலும் நம்பிக்கையும் அளிக்கின்றன. நம்பிக்கையின் பற்றாக்குறையையும், அமைதியில் இருக்கும் அழுகுரலையும் எதிர்த்து விண்ணகத்திற்கும் கடவுளின் இதயத்துக்கு அதை நகர்த்தவும் போராடவேண்டும். இந்த நம்பிக்கையின் பற்றாக்குறை இஸ்ராயேலின் முன்னேற விடாமல் இருக்கும் பாலைவன அடிமைத்தனத்தைப் போன்றது அல்ல. விடுதலைப் பயணம் தடுக்கப்படலாம்; அடிமைத்தனம் இஸ்ராயேல் மக்களை பாலைவனத்தில் முடக்கி முன்னேறவிடாமல் தடுத்தது. மனித குலத்தின் உண்மையை வேறு எப்படி விளக்கமுடியும்? உலகளாவிய சகோதரத்துவத்தின் நுழைவாயிலில் அறிவியல், தொழில்நுட்ப நிலைகளில், கலாச்சார மற்றும் நீதித்துறை மேம்பாடு அனைவருக்கும் கண்ணியத்தை உத்தரவாதம் செய்யும் திறன் கொண்டது. இருந்தபோதும் சமத்துவமின்மை, துன்புறுத்தல் மற்றும் இருளில் மோதல் ஆகியவை இன்னும் இருக்கிறது.

கடவுள் நம்மைக் குறித்து சோர்வடைந்துபோகவில்லை. தவக்காலத்தை சிறந்த ஒரு காலமாக வரவேற்போம். "நானே, உன் கடவுளாகிய ஆண்டவர்; அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர் (விப: 20:2) என்று அவர் நினைவூட்டுகின்றார். தவக்காலம் மனமாற்றத்தின் காலம்; விடுதலையின் காலம். தவக்காலத்தின் முதல் வார நற்செய்தியிலும் இயேசு தூய ஆவியால் பாலைவனத்திற்கு நடத்திச்செல்லப்பட்டு, விடுதலைக்கு சோதிக்கப்படுகிறார். மனுஉரு எடுத்த மகன் நாற்பது நாட்களும் நமக்கு முன்பாகவும் நம்மோடும் நிற்கிறார். பாரவோன் மக்களை பொருட்படுத்தாமல் இருந்ததுபோல் அல்லாமல் கடவுள் நம்மை அவரின் மகனாகவும், மகளாகவும் விரும்புகிறார். பாலைவன அனுபவம் நம்முடைய விடுதலை மேம்படவும், அடிமைத்தனத்தில் மீண்டும் விழுந்துவிடாமல், தனிப்பட்ட முடிவெடுக்கும் சுதந்திரத்தையும் தருகிறது. இத்தவக்காலத்தில் நீதி மற்றும் சமூகத்துடன் இதுவரை செல்லாத புதிய அளவுகோல்களைக் கொண்டு புதிய பாதையில் முன்னேற முடியும்.

எவ்வாறாயினும் விடுதலை நம்மில் சோதனைகள் மற்றும் போராட்டத்தை ஏற்படுத்துகிறது. இதை இயேசு பாலைவனத்தில் நமக்குத் தெளிவுபடுத்துகிறார். "என் அன்பார்ந்த மகன் நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது. (மாற்கு 1:11) என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது (விப: 20:3) இவ்வார்த்தைகள் பொய் என்று நம் பகைவன் கூறுகிறான். பாரவோனை விட நமக்கு அதிகமான சிலைகளை நாம் அமைத்துக்கொண்டோம். நம் எதிரி நமக்குள் பேசும் குரலாக நாம் நினைத்துக்கொண்டோம். ஒவ்வொரு மனிதனையும் அந்தப் பொய் எவ்வளவு ஆழமாகக் கவர்ந்திழுக்கக் கூடியது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இது நன்கு பயணிக்கக்கூடிய சாலை; பணத்திற்கோ, அல்லது குறிப்பிட்ட சில திட்டங்கள், இலக்குகள், எண்ணங்கள், தகுதிகள், பாரம்பரியம் மற்றும் குறிப்பிட்ட தனிநபர்களுடனோ நாம் இணைக்கப்படலாம். இவை நாம் முன்னோக்கிச் செல்வதற்குப் பதிலாக முடக்கவும் செய்யலாம். எதிர்கொள்வதற்குப் பதிலாக மோதலை உருவாக்கலாம். இன்னும் ஒரு புதிய மனிதம் உண்டு. எளியவர்கள், தாழ்ச்சியுள்ள மக்கள் பொய்யின் கவர்ச்சிக்கு அடிமையாகாதவர்கள்; அதேசமயம், சிலைகளை வழிபடுவோர் சிலைகளைப் போல ஊமைகளாகவும், குருடர்களாகவும் காதுகேளாதவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள்.(திபா 115:4) ஏழைகளின் உள்ளத்தோர் எப்போதும் திறந்த உள்ளத்தோடும் தயாராகவும் உள்ளனர். ஒரு அமைதியான சக்தி உலகைக் குணப்படுத்தும் மற்றும் தாங்கிக்கொள்ளும்.

இது செயல்பட வேண்டிய நேரம்; மற்றும் தவக்காலம் என்பது ஒரு இடைநிறுத்தம் ஆகும் இறைவேண்டலில் ஒரு இடைநிறுத்தம். கடவுளின் வார்த்தையைப் பெற்றுக்கொள்ள ஒரு இடைவேளை. சமாரியனைப் போல இடையில் நின்று காயப்பட்ட சகோதரன் அல்லது சகோதரியிடம் நிற்பது. கடவுள் அன்பு, அயலானிடம் அன்பு இரண்டும் ஒரே அன்புதான். வேறு கடவுள்கள் நமக்கு இருக்கலாகாது என்பது கடவுள் முன்னிலையிலும் சகமனிதனுக்கு முன்பாக நிற்பதாகும். இதனால் தவக்காலத் தூண்களான இறைவேண்டல், உண்ணாநோன்பு மற்றும் தர்மகாரியங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத ஒன்றல்ல மாறாக ஒவ்வொன்றும் தன்னை வெறுமைப்படுத்தி, திறந்த உள்ளத்தோடு , வேற்றுத்தெய்வங்களை விடுத்து நம்மை சிறைப்படுத்தியவற்றிலிருந்து விடுவித்துக்கொண்டு செயல்படும் ஒரே தொடர்புடையது. இதனால், தனிமைப்படுத்தப் பட்டிருந்த இதயம் புத்துயிர் பெறும்; மெதுவாக, பின்னர் இடையே நில்லுங்கள். இதனால் வாழ்க்கையின் சிந்தனை, பரிமாணம், தவக்காலம் புதிய ஆற்றல்களை வெளியிடவும் மீண்டும் கண்டுபிடிக்கவும் உதவிசெய்கிறது. கடவுளின் முன்னிலையில் நாம் அனைவரும் சகோதர சகோதரிகள். ஒருவருக்கொருவர் உணர்வுபூர்வமானவர்கள். அச்சுறுத்தல் மற்றும் எதிரிகளின் மத்தியில் நாம் சகப் பயணிகள் என்பதைக் கண்டுபிடிப்போம். அடிமைத்தனத்தை விட்டுவிட்டு நமக்கென வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு பயணிக்கும் இந்தப் பயணம், கடவுள் கண்ட கனவு.

திருஅவையின் ஆயர்மாமன்றம் இந்த காலங்களில் மீண்டும் உருவாக்கப்பட்டு, கண்டுபிடிக்கப்படுகிறது. தவக்காலம் என்பது சமூகங்களின் சமூகமாக முடிவெடுத்தல், சிறிய மற்றும் பெரிய குழுக்களின் முடிவு என அறிவுறுத்துகிறது. அன்றாட வாழ்க்கையை மாற்றும் திறன் கொண்டமுடிவுகள், தனிநபர்கள் மற்றும் படைப்புகள், அதாவது நாம் பொருட்களை வாங்கும் வழிகள், அக்கறை, படைப்பிற்காகவும், கண்ணுக்குத் தெரியாதவர்களையோ அல்லது இழிவாகப் பார்க்கப்படுபவர்களையோ இணைக்க முயலுங்கள். ஒவ்வொரு கிறிஸ்தவ சமூகமும் இதில் இணையுமாறு நான் அழைக்கிறேன். அவர்களின் வாழ்க்கைமுறையை மீண்டும் சீர்தூக்கிப் பார்க்குமாறு கேட்கிறேன். இதுவே சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அவர்கள் செய்யும் பங்களிப்பு. நாம் செய்யும் தவக்கால ஒறுத்தல்கள் இயேசுவை திகைக்கச் செய்யவேண்டாம். இதனால் இயேசு கூறுவது. "நீங்கள் நோன்பு இருக்கும்போது, வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்கவேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக் கொள்கிறார்கள்."(மத்தேயு 6:16) இதற்கு மாறாக மக்கள் உங்கள் மகிழ்ச்சியான முகத்தைப் பார்க்கட்டும். சுதந்திரத்தின் மணம், மற்றும் அன்பை சிறியவற்றிலிருந்து, நமக்கு அருகில் இருப்பவரிடமிருந்து புதிதாகத் தொடங்கி அனுபவிக்கட்டும். இது நம் ஒவ்வொரு கிறிஸ்துவ சமூகத்திலும் நடைபெறட்டும்.

இத்தவக்காலம் எந்த அளவிற்கு மனமாற்றத்தின் காலமாக, மனிதநேயத்திற்கு ஆதரவாக, படைப்பாற்றலின் புதிய தோற்றமாக புதிய எதிர்நோக்கின் வெளிச்சமாக மாறப்போகிறது? நான் ஏற்கெனவே கூறியதை மீண்டும் சொல்ல அனுமதியுங்கள். கடந்த கோடைகாலத்தில் லிஸ்பனில் நான் இளைஞர்களை சந்தித்தபோது இவ்வாறு கூறினேன்: " தொடர்ந்து தேடுங்கள்; அபாயங்களை எதிர்கொள்ளத் தயாராய் இருங்கள். இந்த நேரத்தில் நாம் மிகப்பெரிய ஆபத்துகளை எதிர்கொள்கிறோம். வேதனை நிறைந்த அழுகுரலைக் கேட்கிறோம். மூன்றாம் உலகப்போரை சிறிது சிறிதாக சந்தித்துக்கொண்டிருக்கிறோம். இருந்தபோதும் நம் உலகத்தை மரணத்துள்ளலில் அல்ல ஆனால் புதிய பிறப்பைக் கொடுக்கும் ஒரு செயல்முறையாகப் பார்ப்போம். முடிவல்ல; வரலாற்றின் ஒரு புதிய அத்தியாத்தின் தொடக்கமாக பார்ப்போம். நாம் இவ்வாறு துணிவோடு சிந்திக்க அழைக்கப்படுகிறோம். ( பல்கலைக்கழக மாணவர்களுக்கு தந்த செய்தி - 3-08-2023) அடிமைத்தனத்திலிருந்து வந்த துணிவான மனமாற்றத்தைப் போல ஒரு சிறிய குழந்தையை கையில் எடுத்து, நம்பிக்கை, அன்பைத் தரும் எதிர்நோக்கு; அதற்கு நடக்கக் கற்றுக்கொடுத்து, அதே சமயத்தில் முன்னோக்கிச் செல்ல வழிநடத்துதல்

உரோமை: புனித யோவான் லாத்தரன் ஆலயம், டிசம்பர் 3, 2023 - திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு

1 Cf. CH. PÉGUY, The Portico of the Mystery of the Second Virtue.